# எழுதாத பேனாக்கள் தொலைவதில்லை

யுகபாரதி ✍

என் எழுத்தைக் கௌரவிக்கும் பொருட்டு
யாரோ ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில்
எனக்கு வழங்கிய அலங்காரக் குடுவை நிறைய
பேனாக்கள் இருக்கின்றன
அப்பேனாக்களால்
ஒரு சில நல்ல கவிதைகளை
நான் எழுதியிருக்கிறேன்
அப்பேனாக்களால்
பல முக்கிய பிரமுகர்களின்
தொலைபேசி எண்களைக்
குறித்திருக்கிறேன்
ஒரிரு தடவை
மகளின் விண்ணப்படிவங்களை
நிரப்பப் பயன்படுத்தியிருக்கிறேன்
விரும்பி கேட்டவர்களுக்கு
அன்பளிப்பாகவும் நாலைந்து பேனாக்களை
கொடுத்திருக்கிறேன்
சில பேனாக்கள்
மூடியை தொலைத்தமையால்
மை ஒழுக வீசியும் இருக்கிறேன்
வெவ்வேறு பெயர்களுடைய
அப்பேனாக்கள் முழுவதும் ஒரே செயலில்தான்
ஈடுபடுகின்றன
பேனாக்களின் விலையும் வடிவமைப்பும்
வித்யாசப்பட்டாலும் அவை
எழுதுவதைத் தவிர வேறு எதற்கும்
உதவுவதில்லை
எழுத்துக்களின் நெருக்கத்தை விட
பேனாக்களோடு எனக்கு ஏற்பட்ட நெருக்கம்
கூடுதலானது
இந்தக்கவிதையை எழுதும் இப்பேனாவும்
சொல்ல விழைவது ஒன்றுதான்
எழுதாத பேனாக்கள்
தொலைவதில்லை